கலாசார அலுவல்கள் திணைக்களம்
சுற்றுநிருபம் இலக்கம் : 05/2025

# அரச நடன விழா – 2025

## சுற்றுநிருபம்

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச நடன மற்றும் நாட்டிய நாடக ஆலோசனைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற **அரச நடன விழா – 2025** இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. விண்ணப்பிக்கும் முறை :**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை **2025 மே மாதம் 30** ஆம் திகதிக்கு முன்னர் நீங்கள் வதியும் மாவட்டத்தின் மாவட்ட செயலகத்தில் உள்ள கலாசார பிரிவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அரச நடன விழா – 2025"** என குறிப்பிடப்பட வேண்டும்.

**02. போட்டிகள் நடாத்தப்படும் முறை:-**

**i. முதற் சுற்றுப் போட்டி**
மாவட்ட மட்ட்டத்தில் நடைபெறும் அல்லது ஒவ்வொரு போட்டிப் பிரிவிற்கும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக மாவட்டங்கள் சிலவற்றை ஒன்றுசேர்த்து பொதுவான இடத்தில் போட்டிகள் நடாத்தப்படும்.

**ii. இறுதிச் சுற்றுப் போட்டிகள்:-**
மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொள்ளும் நடனக் குழு தேசிய மட்ட போட்டிக்கான வாய்ப்பினைப் பெறும்.

**3. போட்டிகள் நடைபெறும் முறைமை:-**

- மாவட்ட மட்ட போட்டிகள்
- தேசிய மட்டப் போட்டிகள்
- விருது வழங்கல் நிகழ்வு

**04. போட்டி நிபந்தனைகள்**

i. கலை நிறுவனம், கலாசார மத்திய நிலையம், உயர் கல்வி நிறுவனம், பல்கலைக்கழகம், பாடசாலை, கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயிலும் எவரும் மேற்படி போட்டிக்காக விண்ணப்பிக்க முடியும். திறந்த போட்டிப் பிரிவிற்காக மாத்திரம் தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்க முடியும்.

ii. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வெவ்வேறாக நடனப் படைப்புகளுக்கு விருதுகள் வழங்கப்படும்.

iii. ஒவ்வொரு போட்டிப் பிரிவிற்கும் தனித்தனி விண்ணப்பங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மேலும் தெளிவற்ற மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

iv. விண்ணப்பத்துடன் மாவட்டப் போட்டிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கலைஞர்களின் பட்டியலை இறுதிச் சுற்றில் மாற்ற முடியாது.

v. பாடகர்கள் மற்றும் வாத்தியக் கலைஞர்களைத் தவிர்த்து, குழு நடனத்தில் பங்கேற்பதற்கான குறைந்தபட்ச நடனக் கலைஞர்களின் எண்ணிக்கை 08 ஆகும்.

அதிகபட்சம் 24. கலப்பு தலைப்புகளுக்கு, பெண்கள் மற்றும் ஆண்கள் பொருத்தமான விகிதத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். (இது தவிர, பாட்டு மற்றும் நடனத்தில் அதிகபட்சம் 08 பேர் மட்டுமே பங்கேற்க முடியும்.)

vi. ஒரு நடன நெறியாளரின் கீழ் ஒரு நிறுவனத்தால் மட்டுமே நடன படைப்புகள் வழங்க முடியும், மேலும் ஒரு நடன நிறுவனத்தால் வழங்கக்கூடிய அதிகபட்ச போட்டிகள் 03 ஆகும். (01 தனி. 02 குழுக்கள்.)

vii. போட்டிகளில் கலந்துகொள்ளும் நடனக் கலைஞர்கள் விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி திகதிக்குள் நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பில் இருக்க வேண்டும். (வயது வரம்பை நிரூபிக்க தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ் நடனப் போட்டி நடைபெறும் இறுதித் தினத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

viii. மாவட்ட போட்டியில் பங்கேற்கும் அனைத்து போட்டியாளர்களும் தகுந்த பயிற்சி ஆடைகளை பயன்படுத்த வேண்டும். இறுதிச் சுற்று அல்லது தேசியப் போட்டிக்கு, ஒவ்வொரு நடனத்திற்கும் ஆடைகளைப் பயன்படுத்துவது கட்டாயம்.

ix. எந்தவொரு போட்டி இலக்கம் மாவட்டப் போட்டியில் முதலிடம் பெற்றாலோ அல்லது போட்டியின்றி முதலிடத்தைப் பெற்றாலோ, அந்த போட்டி இலக்கம் தகுதியற்ற இலக்கம் என்று நடுவர்கள் குழு தீர்மானித்தால், அந்த போட்டி இலக்கம் இறுதிச் சுற்றுக்கு பரிந்துரைக்காமல் இருக்க நடுவர் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

x. மேலே உள்ள போட்டி நிபந்தனைகளை மீறும் பட்சத்தில், நடுவர் குழுவிற்கு நடனக் குழு அல்லது குழுவை போட்டியில் இருந்து நீக்கும் அதிகாரம் உள்ளது.

xi. சம்பிரதாய நடனம் மற்றும் வாதனை போன்றவற்றில் பங்குபற்றும் போது ஒழுக்கத்திற்கு ஏற்றவாறு உங்களின் நடனங்களை சமர்ப்பித்தல் வேண்டும். (தாடி வளர்த்திருத்தல் மற்றும் உடம்பில் உருவங்கள் பொறிக்கப்பட்டிருப்பின் போட்டியில் இருந்து நீக்கப்படுவர்)

xii. மாவட்டப் பிரிவு போட்டிகளின் போது பொருத்தமான பயிற்சி உடைகளை அணிந்து போட்டியில் பங்குகொள்ள முடியும்.



அல்லது



xiii. அது ஒரு வெளிநாட்டு நடனமாக இருந்தால், அதை நிகழ்த்துவதற்கு பொருத்தமான பயிற்சி உடையைப் பயன்படுத்த வேண்டும்.

xiv. தாங்கள் முன்வைக்கும் நடனம் உங்கள் சொந்த படைப்பு என்பதை உறுதிப்படுத்த நீங்கள் வசிக்கும் பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர்/கலாசார அபிவிருத்தி உதவியாளர்/கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் சிபாரிசுகளை பெற்று அதனை (உத்தியோகப்பூர்வ முத்திரையுடன்) திணைக்களத்திற்கு நேரடியாக கொண்டு வந்து ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பவும்.

xv. அனைத்து நடனப் படைப்புகளும் தேசிய அளவில் ஒரு சுயாதீனமான, நிபுணத்துவமான மதிப்பீட்டுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன, மேலும் வெற்றிப்பெறும் நடனப் படைப்புகளைத் தேர்ந்தெடுப்பது பற்றிய இறுதி முடிவு அவர்களையே சாரும்

xvi. போட்டியில் பங்கேற்பதானது அனைத்துவித போட்டி நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு உடன்பட்டதாக கருதப்படும்.

xvii. இந்த போட்டிக்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் நடனக் குழுக்கள் போட்டியில் பங்குபற்ற முடியாது.

xviii. நீங்கள் சமர்ப்பிக்க விரும்பும் போட்டி நடனப் படைப்புகள், அந்தந்த போட்டி வகை உங்கள் விண்ணப்பப்படிவத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையில் **அரச நடன விழா - 2025** மற்றும் போட்டித் தலைப்பு தெளிவாகக் குறிப்பிடப்பட்டு, **"பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல"** என்ற முகவரிக்கு **2025 மே மாதம் 30 ஆம் திகதியன்று பிற்பகல் 4.00 மணிக்கு** முன் நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும். அல்லது பதிவு தபாலில் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

xix. போட்டிக்கான விண்ணப்பங்களை எந்தவொரு மாவட்ட மற்றும் பிரதேச செயலகத்திலும் அல்லது கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.culturaldept.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்தும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் (Department of Cultural Affairs) முகநூல் பக்கத்திலிருந்தும் விண்ணப்பத்தையும் அது தொடர்பான சுற்றறிக்கையையும் பதிவிறக்கம் செய்யலாம். மேலும் விவரங்களுக்கு 0112-872030 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளலாம்.

**05. வெற்றியாளர்கள் கௌரவிப்பு:**

தேசிய போட்டிப் பிரிவு :– முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தை பெறுபவர்களுக்கு பணப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், முதலாமிடத்தை பெறுபவர்களுக்கு பணப்பரிசு மற்றும் சான்றிதழுக்கு மேலதிகமாக விருது வழங்கப்படும் என்பதுடன் மாவட்ட மட்டப் போட்டிப் பிரிவு :– முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தை பெறுபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**05. போட்டிகள் நடாத்துதல் :**

மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற நடனக் குழுக்கள் தேசிய போட்டிக்கு அழைக்கப்படுவார்கள். இறுதிச் சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் போட்டியாளர்கள் பொருத்தமான நடன உடையில் நடனப் பகுதியை நிகழ்த்த வேண்டும்.

**08. போட்டி கால அட்டவணை**

- மாவட்ட போட்டிகள் (முதல் சுற்று)
  கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அரச நடன மற்றும் நாட்டிய நாடக குழு ஏற்பாட்டில் மாவட்டம் ரீதியாக சென்று போட்டிகள் நடாத்துதல்

- தேசிய மட்டப் போட்டிகள் (இறுதிச் சுற்று)
  மாவட்ட மட்டத்தில் முதலாமிடம் பெறும் நடனக் குழு கொழும்பில் தெரிவுசெய்யப்பட்ட மண்டபத்தில் அரச நடன மற்றும் நாட்டிய நாடக குழுவினால் நியமிக்கப்படும் நடுவர் குழுவின் முன் நேரடியாக போட்டியில் பங்குபற்றல் வேண்டும்.

- **விருது வழங்கல் நிகழ்வு**
  அரச நடன விருது வழங்கல் - 2025 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பொருத்தமான மண்டபத்தில் நடைபெறும்.

**08. போட்டிக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படக்கூடிய சூழ்நிலைகள்**

(அ) முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்களும், போட்டி நிபந்தனைகளை மீறும் விண்ணப்பங்களும் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

மேற்படி சுற்றறிக்கையே அரச நடன விழா தொடர்பான ஒரே உறுதியான ஆவணமாகும் என்பதுடன் இந்த விருது வழங்கும் விழா தொடர்பாக வேறு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்பட்டால், அரச நடனம் மற்றும் நாட்டிய நாடக ஆலோசனைக் குழு எழுத்து மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்கும். இந்த சுற்றறிக்கையின் விளக்கம், திருத்தம் செய்தல் புதிய சுற்றறிக்கையை திருத்துவதற்கு அல்லது தொகுப்பதற்கு முழு பொறுப்பு அரச நடனம் மற்றும் நாட்டிய நாடக ஆலோசனைக் குழு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு உரித்தாகும்.

**கே.எஸ். தில்ஹானி**
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்

K.S. Dilhani
Director
Department of Cultural Affairs
**Sethsiripaya**, Battaramulla

விபரங்களுக்கு: 0112 872031 / **0112 872030** – அரச நடன மற்றும் நாட்டிய நாடக ஆலோசனைக் குழு

# அரச நடன விழா – 2025

## போட்டிப் பிரிவுகள்

### 01. வயதெல்லை 08 – 12 வரை

**1.1 சாஸ்திரிய நடனம் - தனி** (ஆண்/பெண்) : **“சொல்ல வல்லாயோ”**
– கிளிவிடு தூது, - பாரதியார் பாடல்

**விசேட நிபந்தனை**

- பரதநாட்டியத்திற்கு ஏற்ப உடை, ஒப்பனை என்பன அமைந்திருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- பக்கவாத்தியங்கள் - நட்டுவாங்கம் உட்பட வாய்ப்பாட்டு, மிருதங்கத்துடன் கூடிய நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம், பாடல் தெளிவாக இருக்க வேண்டும்.
- 4 - 6 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**1.2 சாஸ்திரிய நடனம் - குழு :** 1.2.1. அலாரிப்பு
1.2.2. புஸ்பாஞ்சலி

**விசேட நிபந்தனை**

- பரதநாட்டியத்திற்கு ஏற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- பக்கவாத்தியங்கள், நட்டுவாங்கம் உட்பட வாய்ப்பாட்டு, மிருதங்கத்துடன் கூடிய நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம், பாடல் தெளிவாக இருக்க வேண்டும்.
- 4 - 6 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- 8 – 10 பேர் பங்கு பெறலாம். (ஆண்/பெண்/கலப்பு)
- நடன அமைப்பு மாறாமல் தங்களுடைய ஆடல் வடிவம் அமைந்திருக்க வேண்டும்.

**1.3 கிராமிய நடனம் - குழு :** மயில் நடனம் / பாம்பு நடனம்

**விசேட நிபந்தனை**

- கிராமிய நடனத்திற்கேற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- நடனத்திற்கு அமைய பாடல் வரி அல்லது இசை வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
- பக்கவாத்தியம் - கிராமிய நடனத்திற்குரிய இசைக் கருவிகளுடன் நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இருவட்டு பயன்படுத்தலாம். பாடல் தெளிவாக அமைந்திருத்தல் வேண்டும்.
- 5 - 6 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- 6 – 8 பேர் பங்குபெறலாம். (ஆண்/பெண்/கலப்பு)
- தங்களுடைய ஆடலுக்கான உபகரணம் கையில் வைத்திருக்க வேண்டும்.

**1.4 கிராமிய நடனம் - குழு :** காவடி நடனம் / செம்பு நடனம்

**விசேட நிபந்தனை**

- நடனத்திற்கேற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- நடனத்திற்கேற்ப பாடல் வரி அல்லது இசை வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
- பக்கவாத்தியம் - கிராமிய நடனத்திற்குரிய இசைகருவிகளுடன் நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம். பாடல் தெளிவாக அமைந்திருத்தல் வேண்டும்.
- 5 - 6 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- 8- 10 பேர் பங்குபெறலாம். (ஆண்/பெண்/கலப்பு)

### 1.5 புதிய நிர்மானம் : குழு :

தலைப்பு:- **"உழவர் திருநாள்"**

**விசேட நிபந்தனை**

- நடனத்திற்கேற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- நடனத்திற்கேற்ப பாடல் வரி அல்லது இசை வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
- பக்கவாத்தியம் - கிராமிய நடனத்திற்குரிய இசைகருவிகளுடன் நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம். பாடல் தெளிவாக அமைந்திருத்தல் வேண்டும்.
- 4 - 7 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- 08 – 10 பேர் பங்குபெறலாம் (ஆண்/பெண்/கலப்பு)
- தலைப்பின் கருப்பொருள் மாறாது நடனம் அமையப்பெற்றிருக்க வேண்டும்.

## 02. வயதெல்லை 13 – 18 வரை

### 2.1 சாஸ்திரிய நடனம் - தனி :

2.1.1. ஜதீஸ்வரம் (ஆண் மாத்திரம்)
2.1.2. சப்தம் (பெண் மாத்திரம்)

**விசேட நிபந்தனை**

- பரதநாட்டியத்திற்கு ஏற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- பக்கவாத்தியங்கள், நட்டுவாங்கம் உட்பட வாய்ப்பாட்டு, மிருதங்கத்துடன் கூடிய நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம், பாடல் தெளிவாக இருக்க வேண்டும்.
- 5-7 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ஜதீஸ்வரம் மற்றும் சப்தம் நடன அமைப்பு மாறாமல் தங்களுடைய ஆடல் வடிவம் அமைந்திருக்க வேண்டும்.

### 2.2 புதிய நிர்மானம் - குழு:

தலைப்பு: **"தேர்த் திருவிழா"**

**விசேட நிபந்தனை**

- நடனத்திற்கேற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- நடனத்திற்கேற்ப பாடல் வரி அல்லது இசை வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
- பக்கவாத்தியம் - கிராமிய நடனத்திற்குரிய இசைக் கருவிகளுடன் நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம். பாடல் தெளிவாக அமைந்திருத்தல் வேண்டும்.
- 5 - 7 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- 08 – 10 பேர் பங்குபெறலாம். (ஆண்/பெண்/கலப்பு)
- தலைப்பின் கருப்பொருள் மாறாது நடனம் அமையப்பெற்றிருக்க வேண்டும்.

### 2.3 கிராமிய நடனம் - குழு: கோலாட்டம் / கும்மி நடனம்

**விசேட நிபந்தனை**

- நடனத்திற்கேற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- நடனத்திற்கு அமைய பாடல் வரி அல்லது இசை வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
- பக்கவாத்தியம் - கிராமிய நடனத்திற்குரிய இசைக் கருவிகளுடன் நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம். பாடல் தெளிவாக அமைந்திருத்தல் வேண்டும்.
- 4 - 7 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்
- 8 – 10 பேர் பங்குபெறலாம். (ஆண்/பெண்/கலப்பு)

# 03. வயதெல்லை 19 – 29 வரை

### 3.1 சாஸ்திரிய நடனம் - குழு: சிவத்தாண்டவம்

**<u>விசேட நிபந்தனை</u>**

- நடனத்திற்கேற்ப சாஸ்திரிய உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும், அல்லது சிவன் சக்திக்குரிய ஒப்பனையாகவும் செய்து கொள்ளலாம். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- நடனத்திற்கேற்ப பாடல் வரி அல்லது இசை வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
- பக்கவாத்தியம் - கிராமிய நடனத்திற்குரிய இசைக் கருவிகளுடன் நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம். பாடல் தெளிவாக அமைந்திருத்தல் வேண்டும்.
- 4 - 6 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- 8 – 10 பேர் பங்குபெறலாம். (ஆண்/பெண்/கலப்பு)

### 3.2 பரதநாட்டியம் - தனி:

3.2.1 கீர்த்தனம் (பெண்ள்)
3.2.2 தில்லானா (ஆண்)

**<u>விசேட நிபந்தனை</u>**

- பரதநாட்டியத்திற்கு ஏற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- பக்கவாத்தியங்கள், நட்டுவாங்கம் உட்பட வாய்ப்பாட்டு, மிருதங்கத்துடன் கூடிய நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவெட்டு பயன்படுத்தலாம், பாடல் தெளிவாக இருக்க வேண்டும்.
- 5 - 7 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- கீர்த்தனம் மற்றும் தில்லானா ஆகியவற்றின் அமைப்பு மாறாமல் தங்களுடைய ஆடல் வடிவம் அமைந்திருக்க வேண்டும்.

### 3.3 கிராமிய நடனம் - குழு: ஒயிலாட்டம் / சுளகு நடனம்

**<u>விசேட நிபந்தனை</u>**

- நடனத்திற்கேற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- நடனத்திற்கு அமைய பாடல் வரி அல்லது இசை வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
- பக்கவாத்தியம் - கிராமிய நடனத்திற்குரிய இசைக் கருவிகளுடன் நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம். பாடல் தெளிவாக அமைந்திருத்தல் வேண்டும்.
- 5 - 7 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்
- 8 – 10 பேர் பங்குபெறலாம். (ஆண்/பெண்/கலப்பு)

### 3.4 புதிய நிர்மானம் - குழு:

தலைப்பு: **“நவராத்திரி / சிவராத்திரி”**

**<u>விசேட நிபந்தனைள</u>**

- நடனத்திற்கேற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- நடனத்திற்கேற்ப பாடல் வரி அல்லது இசை வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
- பக்கவாத்தியம் - நடனத்திற்குரிய இசைக் கருவிகளுடன் நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவெட்டு பயன்படுத்தலாம். பாடல் தெளிவாக அமைந்திருத்தல் வேண்டும்.
- 5 - 7 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- 8 – 10 பேர் பங்குபெறலாம். (ஆண்/பெண்/கலப்பு)
- தலைப்பின் கருப்பொருள் மாறாது நடனம் அமையப்பெற்றிருக்க வேண்டும்.

## 04. திறந்த பிரிவு - வயதெல்லை 30 இற்கு மேல்

**4.1 சாஸ்திரிய நடனம் - தனி :** (ஆண்/பெண்)

4.1.1. **கௌத்துவம்**
4.1.2 **வர்ணம்** (திரிகால ஜதியுடன் பல்லவி அமைதல் வேண்டும்)

**<u>விசேட நிபந்தனை</u>**

- பரதநாட்டியத்திற்கு ஏற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- பக்கவாத்தியங்கள், நட்டுவாங்கம் உட்பட வாய்ப்பாட்டு, மிருதங்கத்துடன் கூடிய நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம், பாடல் தெளிவாக இருக்க வேண்டும்.
- 6 - 8 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- கௌத்துவம் மற்றும் வர்ணத்தின் அமைப்பு மாறாமல் தங்களுடைய ஆடல் வடிவம் அமைந்திருக்க வேண்டும்.

**4.2 கிராமிய நடனம் - குழு :** பொய்க்கால் ஆட்டம் / கரகாட்டம்

**<u>விசேட நிபந்தனை</u>**

- நடனத்திற்கேற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- நடனத்திற்கு அமைய பாடல் வரி அல்லது இசை வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
- பொய்க் காலின் உயரம் 3 அடி ஆக இருத்தல் வேண்டும்
- பக்கவாத்தியம் - கிராமிய நடனத்திற்குரிய இசைக்கருவிகளுடன் நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம். பாடல் தெளிவாக அமைந்திருத்தல் வேண்டும்.
- 5 - 7 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்
- 8 – 10 பேர் பங்குபெறலாம். (ஆண்/பெண்/கலப்பு)

**4.3 புதிய நிர்மானம் - குழு:**

தலைப்பு: **"வளமான நாடு அழகான வாழ்க்கை"**

**<u>விசேட நிபந்தனை</u>**

- நடனத்திற்கேற்ப உடை, ஒப்பனை என்பன அமையப்பெற்றிருக்க வேண்டும். (இறுதிச் சுற்றுக்கு மாத்திரம்)
- நடனத்திற்கேற்ப பாடல் வரி அல்லது இசை வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
- பக்கவாத்தியம் - நடனத்திற்குரிய இசைக் கருவிகளுடன் நான்கு பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்க வேண்டும்.
- இறுவட்டு பயன்படுத்தலாம். பாடல் தெளிவாக அமைந்திருத்தல் வேண்டும்.
- 5 - 7 நிமிடத்திற்குள் நடன அமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- 8 – 10 பேர் பங்குபெறலாம். (ஆண்/பெண்/கலப்பு)
- தலைப்பின் கருப்பொருள் மாறாது நடனம் அமையப்பெற்றிருக்க வேண்டும்.

# அரச நடன விழா – 2025

## விண்ணப்பப்படிவம்

**1.** விண்ணப்பிக்கும் பாடசாலை / கலை நிறுவனத்தின் பெயர்

……………………………..…………………………………………………….........................................

**2.** குழு பொறுப்பாளரின் பெயர்:………………………………………………………………………….…

**3.** முகவரி :- …………………………………………………………………………………...….

…………………………………………………………………………….………………

**4.** தொலைபேசி இலக்கங்கள் : ……………………………….……………..

கையடக்க தொலைபேசி : ……………………………….……………..

whatsapp இலக்கம் : ……………………………….……………..

மின்னஞ்சல் முகவரி : ……………………………….……………..

தொலைநகல் : ……………………………….……………..

**5.** சமர்ப்பிக்கும் நடனப் பிரிவு : …………………………………………………..………...

**6.** நடனப் பிரிவின் இலக்கம் : …………………………………………………..………...

**7.** பங்கேற்கும் போட்டியாளர்களின் எண்ணிக்கை : ………………………………………………
(பங்குபற்றும் கலைஞர்களின் பெயர் பட்டியல் மற்றும் அடையாள அட்டை இலக்கம் போன்ற விபரங்களை இத்துடன் இணைக்கவும்.)

**8.** பிரதேச செயலாளர் பிரிவு : ……………………………………………………………………

**9.** மாவட்டம் : ……………………………………………………

**10. விண்ணப்பதாரியின் உறுதிமொழி**

…………………………………………………(விண்ணப்பதாரியின் பெயர்) ஆகிய நான் 2024 அரச நடன விழாவின் போட்டி நிபந்தனைகளுக்கு உடன்படுவதுடன், நடுவர்கள் குழுவின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வேன் என குறிப்பிடுகின்றேன்.

என்னால் சமர்பிக்கப்பட்டது...................................................................... (போட்டிப் பிரிவின் பெயர்) 2025 ஆம் ஆண்டுக்கான அரச நடன விருதுகளுக்கு நடனக் கலையை வழங்க எனக்கு உரிமையும் அதிகாரமும் இருப்பதாகவும், இது தொடர்பாக வேறு எந்த நபரும் அல்லது அமைப்பும் உரிமை கோரவில்லை என்றும் இதன்மூலம் சான்றளிக்கிறேன். ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால் அதற்கு நானே பொறுப்பேற்று அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் பெயர்:……………………………………………………………..……….

திகதி:.............................................. கையொப்பம்:……………………...

**11. நிறுவனத்தின் பரிந்துரை**

..........................................................................................................(விண்ணப்பதாரரின் பெயர்) பாடசாலை / கலை நிறுவனம் /கலாசார மத்திய நிலையம் / உயர்கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகம் இதன்மூலம் சமர்ப்பிக்பபட்ட …………………………………………… (போட்டிப் பிரிவின் பெயர்) நடனமானது இந்தப் பாடசாலை / கல்லூரி / கலை நிறுவனம் / கலாசார மத்திய நிலையம் / உயர்கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உருவாக்கம் என்பதுடன், மேற்குறிப்பிட்ட திருவிழாவிற்கு சமர்ப்பிக்க பரிந்துரைக்கப்படுகிறது என்றும் அறிவிக்கிறேன். ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அதற்கு நானே பொறுப்பேற்று அதனைத் தீர்க்க பாடுபடுவேன் என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

நிறுவனத் தலைவரின் பெயர் : ………………………………….……….……..…….

பதவி : ………………………………….……….……..…….

திகதி:…………………………….. கையொப்பம் : ……………………….……..

**(பதவி முத்திரை)**

**12. கலாசார உத்தியோகத்தரின் பரிந்துரை:**

………………………………………………………. (விண்ணப்பதாரியின் பெயர்) பாடசாலை / கலை நிறுவனம் /கலாசார மத்திய நிலையம் / உயர்கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகம் இதன்மூலம் சமர்ப்பிக்பபட்ட …………………………………………… (போட்டிப் பிரிவின் பெயர்) நடனம படைப்பானது இந்தக் கல்லூரி / கலை நிறுவனம் / கலாசார மத்திய நிலையம் / உயர்கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உருவாக்கம் என்பதுடன், மேற்குறிப்பிட்ட விழாவிற்கு சமர்ப்பிக்க பரிந்துரைக்கப்படுகிறது என்றும் அறிவிக்கிறேன்.

கலாசார உத்தியோகத்தரின் பெயர் : ………………………………….……….……..…….

திகதி:…………………………….. கையொப்பம் : ……………………….……..

**(பதவி முத்திரை)**

# அரச நடன விழா – 2025

## முதல் சுற்றுப் போட்டி
## போட்டியாளர்களின் பெயர் பட்டியல்

கலை நிறுவனம் / நிறுவகத்தின் பெயர் :…………………………………………………………...

குழு பொறுப்பாளரின் பெயர் :…………………………………………………………...

இலகத்துடன் கூடிய போட்டிப் பிரிவு :…………………………………………………………...

| இல. | பெயர் | தே.அ.அ. இலக்கம் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |
| 13 | | |
| 14 | | |
| 15 | | |
| 16 | | |
| | | |
| | **பாடல் பாடுபவர்கள்** | |
| 17 | | |
| 18 | | |
| 19 | | |
| 20 | | |
| | **வாத்தியக் குழுவினர்** | |
| 21 | | |
| 22 | | |
| 23 | | |
| 24 | | |
| 25 | | |